## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC.201/2020**

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயபால் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : ராமலிங்கம் | சமயம் | : |
| கிராமம் | : கணக்கன்குப்பம் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 45 |

தேதி 06.07.2023

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி.A.பரமேஸ்வரி W.Gr.II-2435 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர். )**

**1.** நான் கணக்கன்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 சத்யா என் தம்பி மனைவி. பட்டியல் சாட்சி 5 கதிர்வேல் தேவதானம்பேட்டை கிராமத்தை சார்ந்தவர். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். என் ஊரைச்சார்ந்தவர்.

2. 03.05.2019 ம் தேதி காலை 10.30 முதல் 11. 00 மணி அளவில் நடந்தது. சத்யாவை ஆஜர் எதிரி பிரபு கத்தியால் வெட்டியதாக கதிர்வேல் என்பவர் எனக்கு சொன்னார். அதன் பிறக நான் வந்து சத்யாவை செஞ்சி அரசு மருத்துவமணைக்கு அழைத்துசென்றேன். நான் சத்யாவை வந்து பார்த்தபோது சத்யாவிற்கு 2 கையிலும் வெட்டுக்காயம் பட்டு கீழே கிடந்தார். சத்யாவின் பிள்ளைகளான 5 வயதும், 8 வயதும் உள்ள குழந்தைகள் தாயாரோடு கத்திக்கொண்டு பதறிக்கிடந்தார்கள். செஞ்சி அரசு மருத்துவமணையில் பரிசோதித்து கட்டுப்போட்டு முதல் உதவி சிகிச்சை பார்த்துவிட்டு ஜிப்மர் பாண்டிச்சேரி மருத்துவமணைக்கு மேல் சிகிச்சைக்காக போக சொன்னார்கள். பிறகு பாண்டிச்சசேரிக்கு சிகிச்சைக்கு சென்றோம். பாண்டிச்சேரி மருத்துவமணையில் தையல்போட்டு சிகிச்சை அளித்தார்கள்.

3. மேற்படி சம்பவத்திற்கு முன்பாக 28.04.2019 ம் தேதி சத்யா வீட்டில் இருந்தபோது அவரை பலாத்காரம் செய்ய ஆஜர் எதிரி முயற்சி செய்திருக்கிறார். அதன் தொடர்ச்சியாகதான் சத்யா கோவிலுக்கு செல்லும்போது வழியில் சென்று மறித்து கத்தியால் வெட்டி கொலை முயற்சி செய்திருக்கிறார். இதற்கு முன்பாக சத்யா வீட்டிற்கு சென்று கையில் வைத்திருந்த மண்ணெண்ணை கேனை எதிரி பிரபு ஜன்னல் வழியாக

போட்டுவிட்டு ஓடிவிட்டார். அது சம்மந்தமாக சத்யா கண்டாச்சிபுரம் காவல்நிலையத்தில் புகாரு ம் கொடுத்தார். போலிசார் விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

4. போதிய வாய்ப்பளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.